15.4.2026
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**பினாங்கில் ரிம800 மில்லியனுக்கும் அதிகமான மத்திய அரசு நீர் திட்டங்கள்**

- **நீண்டகால வெப்பமான மற்றும் வறண்ட பருவங்கள் மற்றும் சுங்கை மூடா அவசரகால சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் நோக்கில், விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) அதிகபட்ச நீர் எடுப்பை 600 MLD-இலிருந்து 1,000 MLD-ஆக உயர்த்தும் புதிய குழாய்த் திட்டமும் இதில் அடங்கும்.**

பினாங்கு, புதன்கிழமை, 15.4.2026: எரிசக்தி மாற்றம் மற்றும் நீர் உருமாற்ற அமைச் (PETRA), பினாங்கில் ரிம800 மில்லியனுக்கும் மேற்பட்ட மொத்த செலவில் மத்திய அரசின் நிதியுதவியுடன் பல முக்கிய நீர் திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

அமைச்சின் நீர் விநியோகப் பிரிவு (BBA) தற்போது பின்வரும் ஐந்து திட்டங்களை மேற்கொண்டு வருகிறது:

| திட்டங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு (ரிம மில்லியன்) | இலக்கு நிறைவு |
|---|---|---|
| 1. வடக்கு செபராங் பிறை (SPU): ரந்தாவ் பன்ஜாங்கில் புதிய சுங்கை மூடா தடுப்பணை | 175.0 | 2027 |
| 2. **மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டம் (MDEP) இறுதிக்கட்டம்:**<br>• தினமும் **440 (MLD)** திறன் கொண்ட, சுங்கை டுவா கால்வாய்க்கு (SPU) | 214.0 | 2028 |

| | | | |
|---|---|---|---|
| | அருகிலுள்ள **லஹர் யூய் மூலநீர் பம்ப் ஹவுஸ்** (SP) அமைப்பு; மற்றும்<br>• லஹர் யூயிலிருந்து விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD) வரை **400 MLD** திறன் கொண்ட **“இருதிசை ஓட்ட” (reversible flow) மூலநீர் குழாய் அமைப்பு** | | |
| 3. | புக்கிட் பஞ்சோர் அணையை விரிவுபடுத்துதல் மற்றும் ஆற்றுக்கு அப்பால் நீர்த்தேக்கத் திட்டம் (ORSS) அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 419.0 | 2026ஆம் ஆண்டில் சாத்தியக்கூறு ஆய்வுகள் நிறைவடைந்த பின்னர், திட்டத்திற்கான செயல்பாட்டு தேதிகள் நிர்ணயிக்கப்படும் |
| 4. | திதி கெராவாங் மற்றும் தெலுக் அவாக்கில் நீர் ‘intake’ பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனுடன், திதி கெராவாங்கிலிருந்து தெலுக் பஹாங் அணை (தென்மேற்கு மாவட்டம்) வரை புதிய மூலநீர் குழாய் அமைக்கும் பணியும் இதில் அடங்கும். | 26.5 | 2029 |

| | | | |
|---|---|---|---|
| 5. | பினாங்கு மாநிலத்தில் நீர் விநியோகத்திற்கான மூலநீர் வளங்கள் குறித்த விரிவான ஆய்வு: | 3.0 | 2029 |
| **மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரிம மில்லியன்)** | | **837.5** | |

**முக்கிய நன்மைகள்:**

- **440 (MLD)லஹார் யூயி பம்ப்ஹவுஸ் நிலையம்**, மழைக்காலங்களில் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையை (EMD) மேலும் திறமையாகவும் விரைவாகவும் மீண்டும் நிரப்ப உதவும்.

  மழைக்காலங்களில், நீரேற்று நிலையத்திலிருந்து வரும் சுத்திகரிக்கப்படாத நீர், புதிய 400 மில்லியன் லிட்டர் (MLD) திறன் கொண்ட இருவழிப் பாய்வு (reversible flow) குழாய் மூலம் அணைக்கு அனுப்பப்படும்.

  வறண்ட காலங்களில் மற்றும் அவசரநிலை சூழ்நிலைகளில், இந்தக் குழாய் மூலம் அணையிலிருந்து அதிகளவு நீரை வெளியேற்ற முடியும். இதன் மூலம், சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குச் செல்லும் சுங்கை டுவா கால்வாய்க்கு (SPU) நீர் வெளியேற்றும் அதிகபட்ச திறன் 600 மில்லியன் லிட்டர் (MLD)-இலிருந்து 1,000 MLD-ஆக உயர்த்தப்படும்.

  எனவே, இந்த இரண்டு திட்டங்களும் செயல்பாட்டுக்கு வருவது, சுங்கை மூடாவிற்கான பினாங்கின் “backup” சுத்திகரிக்கப்படாத நீர் ஆதாரமாக அணையின் செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தும். இந்த இரண்டு இறுதி MDEP கூறுகள் நிறுவப்பட்ட பிறகு, சுங்கை மூடாவில் ஏதேனும் எதிர்பாராத நிகழ்வு ஏற்பட்டாலும், மாநிலம் தழுவிய நீர் விநியோகத் தடைகள் ஏற்படும் அபாயத்தை PBAPP குறைக்க முடியும்.

- புதிய **ரந்தாவ் பாஞ்சாங் தடுப்பணை**, 1973ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வரும் பழைய தடுப்பணைக்கு மாற்றாக அமையும். இதன் முதன்மைப் பணிகள், கடல் நீர் மேல்நோக்கி சுங்கை மூடா ஆற்றுக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதும், ஆற்றின் நீர்மட்டங்களைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். அதன்படி, இந்த புதிய தடுப்பணை, பினாங்கின் லஹார் தியாங் நீர் உறிஞ்சும் நிலையம்,

கெடாவில் உள்ள 10 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 8 பாசன நீர் உறிஞ்சும் நிலையங்கள் ஆகியவற்றிற்கு சுங்கை மூடா ஆற்றிலிருந்து நீரை மேலும் திறமையாகவும் பயனுள்ளதாகவும் எடுத்துக்கொள்ள உதவும்.

- **புக்கிட் பாஞ்சோர் அணையின் விரிவாக்கம்** மற்றும் **சுங்கை கிரியான் (ORSS)** மேல்நிலை நீர் விநியோகக் கால்வாய் கட்டுமானம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் வரை,ஆகியவை தெற்கு செபராங் பிறை (SPS) பகுதியில் நீர் விநியோக சேவைகளை மேம்படுத்தும்.

- **திதி கெராவாங், தெலுக் அவாக் மற்றும் தெலுக் பஹாங் அணைகளின்** நீர் விநியோக திட்டங்கள், மழைக்காலங்களில் அணையை விரைவாக நிரப்ப உதவுவதோடு, பினாங்கு தீவின் தென்மேற்கு மாவட்டத்தில் அத்தியாவசிய மூலநீர் ஆதாரமாக அதன் செயல்திறனையும் மேம்படுத்தும்.

- **சுத்திகரிக்கப்படாத நீர் வளங்கள் குறித்த ஒரு புதிய ஆய்வு**, பினாங்கு மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் எதிர்கால நீர் விநியோக திட்டங்களுக்கு ஒரு புதுப்பிக்கப்பட்ட அடிப்படையாகவும் மற்றும்/அல்லது ஓர் மேற்கோளாகவும் அமையும்.

  இந்த மத்திய அரசின் நீர் திட்டங்கள், **PBAPP-இன் ரிம2.1 பில்லியன் மதிப்பிலான நீர் அவசரக்காலத் திட்டம் 2030 (WCP 2030)** மற்றும் **P-PWP** ஆகியவற்றுக்குக் கூடுதலாக மேற்கொள்ளப்படும் தனித்தனித் திட்டங்கள் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

ஒப்புதல்

பினாங்கிற்கான கூடுதல் நீர் திட்டங்களை மேற்கொள்ள ஒப்புக்கொண்டதற்காக, PBAPP சார்பில் PETRA அமைச்சகத்தின் நீர் விநியோக பிரிவு (BBA)-க்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பினாங்கு மாநிலம் இயல்பாகக் குறைந்த நீர் வளங்களைக் கொண்டதுடன், விரிவடைந்து வரும் சமூக-பொருளாதார தேவைகளைக் கொண்ட நீர் அழுத்தம் நிலவும் மாநிலமாக இருப்பதால்,

கூட்டரசு நீர் திட்டங்களுக்கு எங்களின் முழுமையான ஆதரவை தொடர்ந்து வழங்குவோம்.

இந்த மாநிலத்தை "குடும்பத்திற்கு உகந்த, பசுமையான மற்றும் தேசத்திற்கு உத்வேகம் அளிக்கும் அறிவார்ந்த மாநிலமாக" மாற்றும் பினாங்கு 2030 தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவாக, பினாங்கின் நீர் பாதுகாப்பை உறுதி செய்ய நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து செயல்படுவோம்.

நன்றி.

---


| | | |
|---|---|---|
| எழுத்தாக்கம் | : | Syarifah Nasywa bt Syed Feisal Barakbah<br>Corporate Communications Section |
| மின்னஞ்சல் | | comms@pba.com.my |